

காங்கேசன்துறை

அமரத்துவமெய்திய

## திருமதி மனோன்மணி கணபதிப்பிள்ளை

அவர்களின்

## சிவ ஐக்கிய

# நினைவு மலர்


பூவுலகில்
25 . 05 . 1938

பொன்னுலகில்
26 . 06 . 1988

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருவே வருக தெவிட்டாததேனே வருக இன்னமுதத்
தெளிவே வருக பேரின்பச் செறிவே வருக ஏர்சுமந்த
உருவே வருக பரஞான ஒளியே வருக அருமறையின்
உவப்பே வருக அனைத்துயிர்க்கும் உயிரே வருக
கதியளிக்கும்
தருவே வருக உலகீன்ற தாயே வருக நாயேற்குத்
தஞ்சே வருக பரனணியும் தாரே வருக கார் இவரும்
மருவேய் பொழில் சூழ் எழில் அளகை வாழ்வே
வருகவருகவே
வானுர் தெய்வ மாதர்சிகா மணியே வருக வருகவே



அமரத்துவம் எய்திய எமது குலவிளக்கு

# திருமதி மனோன்மணி கணபதிப்பிள்ளை

மலர்வு: 25-05-1938

உதிர்வு: 26-06-1988

## குடும்பமெனும் கோட்டையிலே
## வீற்றிருந்த பெண்ணரசி
## நெடும் பயணம் போனயோ
## நெஞ்சம் தவிக்கவிட்டு?

''கேளாதே வந்து கிளைகளாய் இல் தோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள்-வாளாதே
சேக்கை மரண் ஒழியச் சேண் நீங்கு புள் போல
யாக்கை தமர்க் கொழிய நீத்து''.

என நற்றமிழில் நாலடியார் நவில்கின்றார்.

கூடானது வெறிதே மரத்திலிருக்க அதிலிருந்தும் தொலைவிற்குப் பறந்து சென்றுவிடும் பறவைகள் போல மக்கள், ஒருவரையும் கேளாமலே வந்து சுற்றங்களாய் ஒரே குடும்பத்திற் பிறந்து, பின்னர் தம் உடம்பை உறவினரிடம் கிடக்குப்படி நீக்கிவிட்டு பேசாமலே இறந்துவிடுவர். என்பது அவரது கருத்து. கூட்டை நீக்கிவிட்டுப் பறந்துவிடும் பறவைபோல மனித உயிர்கள் பறந்துவிடுகின்றன. இது இயற்கையின் நியதி என்றாலும் கூட இவ்வுலகிலே ஆர்வலராய் அகமகிழ்ந்திருந்தவர்களின் பிரிவினைத் தாங்கிடும் சக்தி எவர்க்குப் இருப்பதில்லை.

தன் இனிய செயல்களால், உன்னதமானபண்புணர்வுகளால் பலர் உள்ளத்திலும் நிலைத்துவிட்ட மனோன்மணி அவர்களின் பிரிவும் தாங்குதற்கரியதே.

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்கிறார் கவிமணி.

எங்கள் மனோன்மணி அந்தக் கவிமணியின் உரைமணிக்கு ஒப்பமாதவம் செய்த நல்லாள் என்றே கூறவேண்டும்

சினமுண்மை அறியாது என்றும் சிரித்தே நின்றிடும் அந்தச் சீரிய தையலாளை ஈன்றெடுத்த பெருமை கொண்டார்கள் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சண்முகம் பெரியதம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளாவர் ''தம்பொருள் என்பதம் மக்கள்'' என்கிறார் வள்ளுவர் இம் மனோன்மணி. அந்த வள்ளுவன் வாக்குக்கமைய ஈடற்ற செல்வமாய், இனிய தவப்புதல்வியாய் விளங்கினார். பெற்றோர் அவரை தம் ஒப்பற்ற

''செல்வ ◦ மனவே'' கருதினர். இந்த அருந்தவச் செல்வம் மனோன்மணி ஆண்டது 1938ல் மேத் திங்கள் இருபத்தைந்தில் பெண்மகவிலாப் பெருங்குறை தீர்த்திட நன்நிலம்மீது நல்மகளாகி பெற்றவர் இதயம் களித்திடவைத்தார். மூத்தவராய் குடும்பத்தில் தலைமகனாய்த் தோன்றிய வீரசிங்கம் அண்ணனுக்கு அருமைச் சகோதரியாய் அன்புணர்வைக்காட்டி நின்றார்.

வரலாற்றுப் பெருமையைத் தனதாக்கி நிற்கும் வளமிகு மண்ணும் காங்கேசன்துறையில், கலைகள் மேவும்சிகரமாகத் திகழ்ந்து கலை நலன்கள் எழில் பெறும் நடேஸ்வரா நற்றாயின் கல்விப் பாலுண்டு களித்திருந்தார். அறிவு தழைத்திருந்தார், அனைவர் இதயத்தையும் தன் ஆற்றலால் கவர்ந்திருந்தார். மாணவப் பருவம் தாண்டி இளமை எழில் நலம் சிறந்தவேளையில் மூத்தோர் அறிஞர் சூழ்ந்திடும் சுற்றம் நிச்சயித்திட்ட மணமகன் தன்னை வாழ்வின் தலைவனாய் வரித்துக்கொண்டார். அளவெட்டி மண்ணில் அருமைமைந்தன் செல்லையா-கயிலாயபிள்ளை தம்பதியர்தம் சீர்பெறு புதல்வன் கணபதிப்பிள்ளை அவர்களே இவர் பொற்கரம் பற்றிய நற்பெரும் கொழுநன்.

இல்லறக் கனவில் இனிய சுகந்தங்கள் இவ்விணையினை இனிதே மகிழவைத்தன. மங்களமான மனைமாட்சிப் பேறாக நன்கலமான நற்செல்வங்களை ஈன்றெடுத்தனர் தாய்மையின் பெருமையால் மனோன்மணி தலைநிமிர்ந்திருந்தார்.

மனோரஞ்சிதம், ஜெயரஞ்சிதம், ஞானரஞ்சிதம் கலாரஞ்சிதம் நன் எனும் மணிகள் நான்கை தன் பொன்மணிகளாகப் பெற்றெடுத்து பெருமைகொண்டார். முத்தால் மூத்தவளாய்வர்துதித்த மனோரஞ்சிதம் செல்வராஜா எனும் சீரிளம் செல்வனைக் கைப்பிடித்ததால் அத்தையெனும் பெருமையும் இத்தரையில் பெற்று. நின்றார் மனோன்மணி.

அன்புத்தாயாக வள்ளுவன் வகுத்துக் காட்டியாங்கு மனைத் தக்க மாண்புடையளாக, கடும் சொல்லறியாக் காரிகையாக பொங்கலில்லாத ஞான உள்ளம் கொண்ட பொற்புடைப் பாவையாக விளங்கின மனோன்மணி அவர்கள் அருமைச் செல்வங்கள் தாய்தனை பிரிந்தாற்றும் கன்றெனத்துடித்துநிற்க, கைப்பிடித்தோன் கண்ணீர்க் கடலில் மூழ்கிநிற்க, உற்றவர்கள் உள்ளம் துடித்தலற 26.6.88 அமலனடி தேடி அவ்வுலகம் சென்றுவிட்டார். குஞ்சுகளை அணைத்துக் குதூகலித்திருந்த தாய்பறவை, குவலயத்தைத்துறந்து கூடுவிட்டுப் பறந்துவிட்டது.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



## அன்பாலே என துன்பமெல்லாம் துடைத்தெறிந்த தூயவளே!

மனைத்தக்க மாண்புடையாளாகித் தற்கொண்டான் வளத் தக்க வாழ்க்கைத் துணைவியே! நீ நிறைந்தால் என் இல்லத்தில் இல்லாததென்னம்மா?

பென்றிற் பெருந்தக்கவளே! அரசெனவே வீற்றிருந்தேன்! அமைச்செனவே நீ இருந்தாய் அவலம் வரும்போது அறிவுரைகள் தந்து நின்றாய் இன்று அவலந்தில் மூழ்கவிட்டு அவ்வுலகம் சென்றாயோ? தனிமையிலே தவிக்கவிட்டு தாழ்விலான் தாள் தேடிச்சென்றாயோ? அம்மா! என்றபோது அன்பாக அழைத்திடுவேன அன்னையே நீ எனக்கு, ஐயமில்லை என்தாயே! அத்துணைக்கு அன்பு தந்தாய், துயரத்திலும் பெருவாழ்வு தந்திட்ட தூயவளே! அடிசிற்கினியாளாய் படியிற் சிறந்து நின்றாய்.

பதிசொற் தவறாய் நீ! பாரில் எனைவாழவைத்தாய் இல்வாழ்வுப் பெருமைதனை ஈந்திடவே நல்முத்து நான்கினையே ஈன்று புறந்தந்தாய்.

அவர்தம் கண்களிலே கண்ணீர் முத்துக்கள் காணப் பொறுக்காதே உன்மனமும்! இப்போது காணாது போய்விடவும் கல்மனமாய் போயிற்றோ!

என் முகம் வாடிவிட்டால் ஏங்கித் தவித்திருப்பாய் உன் பொன்முகம் வாடிவிடும், பொறுக்காதே என் மனமும் பொழுதுமோ விடியாது.

இன்று நிலையாக வாடவிட்டு, நெஞ்சம் குலைய விட்டு, விலையில்லாப் பெருமணியே விரைந்தேகிச் சென்றாயோ?

அலையாக என் நெஞ்சில் உன் நினைவு மோதுதம்மா கலையாது உன்வடிவம், காலமெல்லாம் நிலைத்திடுமே.

உங்கள் ஆத்மசாந்திக்கு வேண்டிநிற்கும்

*அன்புக் கணவர்.*

## பாசத்தைத் துறந்தாயோ
## பாரில் எம்மைத் தவிக்கவிட்டு
## பறந்தே நீ சென்றாயோ?

"ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம்
நொந்து பெற்றுப் பையலென்ற போதே
பரிந்தெடுத்துச் செய்ய இரு கை புறத்திலேந்தி
கனகமுலை தந்தவளே."

தொட்டிலிலே போட்டெம்மைத் தாலாட்டித் துயிலவைத்து
பொற்புடைய தாயே பொன்னுருவே தண்ணளியே.

இதயம் விரும்பியதை அக்கணமே அளித்தவளே
குறிப்புணர்ந்து எம் குறைகள்
நொடிப் பொழுதில் களைத்தவள் நீ
நோய் நொடியைக் கண்டுவிட்டால்
நொந்து மிக வாடி பாயிலே சாய்ந்துவிட்டால்
பரிதவித்துத் துடித்தழுது பாசத்தைக் கொட்டி
நின்றாய் அன்னையே ஆருயிரே நேசத்தை
மறந்தாயோ.

சோதரன் ஒன்றில்லாக் குறைதன்னை தீர்த்திடவே அண்ணனுக்கு அண்ணனாய் தம்பிக்குத் தம்பியாய் எமக்குக் காட்டினாய் திருமாவளவனை அவ்வளவன் பாசத்தால் இமைக்கா விழியுடனே காத்தன்றோ பார்த்திருந்தான் காலன் கைப்பட்டு அனைவரையும் கரையவிட்டு ஞாலம் துறந்து ஞானத் தலைவன் தன் நற்றாளைச் சேர்ந்தாயோ.

உங்கள் செல்வங்கள் நாமிங்கே வடிக்கின்ற கண்ணீரை துடைக்கின்ற கரங்களை நாம் எப்போது காண்போமம்மா அழுகின்ற குரலோசை அம்மா கேட்கலையோ விழிசிந்தும் உதிரத்தை துடைத்திட நீ வாராயோ.

அன்புத் திருவுருவே அழிவிலா பொன்னுருவே
எங்கள் குல விளக்கே என்றும் எமக்குத்தக்க
வழிகாட்டியாய் விளங்க வேண்டி இறைவனை
வேண்டுகிறோம் அம்மா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிள்ளைகள்.



## நெஞ்சம் நிறைந்த தாய்

எனது அன்புகுலத்தாயே
நின்அன்புருவம் நிழல்போல நிற்கின்றதே
தாயிலும் மேலாக தம்பி தம்பி — என்று
வாய் நிறைய அழைத்து வந்தீர்களே
அய்யகோ - அன்புமாமி! எமக்கு என்றும் உறுதுணையாக
இருப்பார் என்று இருந்தோம்
இனியாரையம்மா நம்பி இருப்பது.
எமக்கு என்றும் அன்னைக்கு அன்னையாகவும்
அறிவுகூறும அமைச்சராகவும்
பழகுதற்குற்ற சினேகிதியாகவும இருந்தீர்கள்
பண்புநிறைந்த எம்குலவிளக்கே
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
எங்கே சென்றீர்கள் தங்களை நாம் என்றும்
தெய்வமாகப் போற்றுவோமே
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

அன்புடன் மருமகன்
செல்வராஜா.

---

## பாசத்தின் பிறப்பிடமே

அண்ணா! அண்ணா!!

என்று வாய் கொள்ள அழைத்த என் அருமைத்தங்கையே! எங்கையம்மா சென்றாய் என்னைத்தவிக்கவிட்டு. வீட்டினிலே விருந்தென்றால் முன்னின்று நடத்திடுவாய். உற்றதுணையாக தங்கை இருப்பாள் என்று கனவுகண்டேன் இன்றோ! எங்களையெல்லாம் தவிக்கவிட்டு நெடும்பயணம் சென்றாயோ!


கல் நெஞ்சுபடைத்த காலன் உங்களை எம்மிடமிருந்து பறித்தாலும் நாங்கள் எங்கள் நெஞ்சங்களிலே உங்களைத் தெய்வமாக்கி போற்றுவோமம்மா.

அன்புச் சகோதரன்
வீரசிங்கம்.

## மச்சாள்மார் - சகோதரிமார்

எங்கள் அன்புக்கு உரியவளே நாங்கள் மச்சிஎன்றும் அக்கா என்றும் அன்புடன் அழைத்து மகிழ்ந்தோமே எப்படி அம்மா எங்களை எல்லாம் மறந்து பிரிந்து செல்ல மனம் வந்தது. எங்களுக்கு எல்லாம் நல்ல தலைவி நீங்கள் என்று இருந்தோமே இனி யாரம்மா எங்களை வழிநடத்துவது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.



## கரை தெரியாக் கப்பலெனத் தவிக்கின்றோம்

பெரியம்மா என்று வாய்நிறைய அழைத்து ஆனந்தமடைந்தோமே எம்மையெல்லாம் உங்கள் புன்சிரிப்பால் அடிபணிய வைப்பீர்களே அம்மா கடிந்தவேளையிலும் எங்களுக்காக வாதாடி எங்கள் அன்பைப்பெற்ற அம்மாவே, இனியாரையம்மா பெரியம்மாவென்று அழைக்கப்போகின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வமே எம்மையெல்லாம் கலங்க விட்டு எங்கையம்மா சென்றீர்கள் உள்ளமெல்லாம் துடிக்குதம்மா உங்கள் உருவத்தைக் காண அதைப்பொறுக்காத காலன் எல்லோ உங்களைப்பறித்து எடுத்துவிட்டான்.

உங்கள் உடல்தானம்மா எங்களைவிட்டுப் போனதே ஒழிய உள்ளமெல்லாம் எங்களுடன் இரண்டறக்கலந்துவிட்டது.

உங்கள் ஆத்மாசாந்திபெற எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

அன்புடன்

*பெருமக்கள்.*



## மருமக்கள்மார்

அத்தை என்றும் மாமியென்றும் ஆசையாக அழைத்து மகிழ்ந்தோமே தாங்கள் காட்டிய அன்பு வழியில் நாங்கள் மனம் மகிழ்ந்து சென்றோமே நீங்கள் இட்ட அன்புக்கட்டளைக்கு என்றும் மாறாக நடந்தது இல்லையே தங்களைப்போல் ஓர் உன்னதமான அன்புத்தெய்வம் இல்லையென்று இருந்தோமே எப்படி இவற்றை எல்லாம் மறந்து எம்மைவிட்டுப்பிரிய மனம் வந்தது.

நீங்கள் என்றும் எமக்குத் தெய்வமாக நின்று எம்மையெல்லாம் வழிநடத்த இறைவனை வேண்டி உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

## சின்னக் குழந்தைகளும் சிறுநகை சிந்திடவே கன்னற் தமிழாலே கவர்ந்திழுக்கும் இனியவள் நீ!

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்ற வள்ளுவனின் வாக்கிற்கொப்ப வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுலகெய்திய திருமதி மனோன்மணி கணபதிப்பிள்ளை மாதர் குலத்துக்கோர் எடுத்துக்காட்டு. தற்பெருமை இல்லாத உள்ளம், இனிய பேச்சும், அன்பான நோக்கும், அமைதியான போக்கும், தெய்வ நம்பிக்கையும் கொண்டவர்.

மனோன்மணி அக்கா வழியில் வருகிறார் என்றால் எல்லோரும் ஒருகணம் தரித்து நின்று உரையாடாமல் போகமாட்டார்கள். அவ்வளவிற்கு அன்பாகவும், பண்பாகவும் நகைச்சுவையோடும் உரையாடுவார் குறிப்பாகத் திருமணமான இளம் பெண்கள் இவரது கண்ணில்பட்டாற்போதும், பலர் அன்பு கனிந்த கேலிக்கும் இதமான இனிமையான கிண்டலுக்கும் இடமாவார்கள். பெரியவர்கள் மட்டுமின்றிச் சின்னஞ்சிறு குழந்தைகளும் அவருடைய தாய்மை அன்பால் கட்டுண்டு மகிழ்ந்தனர். மழலைபேசும் குழந்தைகளை அழைத்துக் கொச்சையான மழலைகளின் மொழியிலேயே வசனங்கள் சொல்லிக்கொடுப்பார்கள். அந்தமழலைகளும் அந்தவசனங்களை அப்படியே சொல்வார்கள். கேட்பவர்கள் பலமாகச் சிரிப்பார்கள். மனோன்மணி அவர்கள் பாதையில் போகும்போது நிற்

பவர்களுடன் நயமும், நளினமும், நட்பும் நிறைந்த நான்கு வம்பு வார்த்தைகள் பேசாமல் போகமாட்டார்கள்.

மல்லிகை - கனகாம்பரமென்று மாலேயும் கையுமாக வரும் போது அந்தநடையில் ஒருதனிச் சிறப்பை, நளினத்தை, தாய் மையின் விகர்சிப்பைக் காணலாம்.


பிள்ளேயாரின் திருவிழாவென்ருல் அங்கே மனோன்மணி அவர் கள்தான் முன்னுக்குத் தெரிவார். பிள்ளேயாரின் விழாக்களில் ''கோலாட்டம்'' பழமையான இசைநடன நிகழ்ச்சிகளே அறி முகப்படுத்தித் திருவிழாக்களுக்கு மெருகூட்டியமை மனோன்மணி அவர்களது தனிச்சிறப்பு.

உயர்ந்த தோற்றம் - எடுப்பான நடை இடையில் கைகளேக் கட்டிக்கொண்டு நின்று நாலுவார்த்தை பேசும்போது அவரின் தனியழகைக்காணலாம்.

இவ்வாறு பல்சிறப்பும், பண்பும், அன்பு வடிவான குண வதியின் இழப்பு எங்கள் அயலவர்கள் மத்தியில் ஓர் ஈடுசெய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும். அன்னுர் இன்று எங்களிடையில் இல்லாவிட்டாலும் எங்கள் நெஞ்சங்களிலிருத்தித் தெய்வமாகப் பூசிப்போமாக. அன்னுரின் ஆத்மாசாந்திபெற எல்லாம்வல்ல செல்லப் பிள்ளேயாரின் திருவருளே வேண்டிநிற்போமாக.

நன்றி.

பெருமகன்.





## கண் நிறைந்த சிற்பம்

ஆற்றலும் அன்பும் மிக்க
அரும்புகழ் கொண்ட தாயே
பாரினில் புகழ்கள் ஈட்டி
பரிதபம் அடைந்த அன்னே
மாண்புறு மனோன்மணி
வழங்கிய புகழ்கள் பாடத்
தெள்ளிய தெய்வம் வந்து
தெம்பெனக் கருளுவாயே
அன்பினிற் கரிய அன்னே
அறிவினிற் சிறந்த நங்கை
பொங்குமிப் புவியின் கண்ணே
போற்றுதற்கரிய நங்கை
கண்ணியமான மாந்தர்
கண்ணென நின்ற தலேவி
புண்ணியஞ் செய்து பெற்ற
பொற்கொடி மனோன்மணி
கருத்துடன் கல்விதன்னேக்
கவனமாய் முடித்தபின்னர்
அன்புள்ள பெற்ருேருக்கு
அரும்பெருந்துணேயாய் வாழ்ந்து
செப்புதற்கரிய தொண்டு
செவ்வனே செய்து ஆங்கே
தந்நலங்கருதா நெஞ்சு
தளர்விலாச் செயலில் வீரம்
ஊருக்கு நன்மை செய்து
உழைத்துத்தான் என்ன மிச்சம்
பாரினில் பெயரை மட்டும்
பதித்ததைத் தவிர வேறு
பலனிலே ஆங்கு அவற்கு

காற்றிலும் வேகம் மிக்க
கருத்துக்கள் கொண்ட உள்ளம்
ஆற்றிய சேவை தன்னை
அளவிடற்கரிதாமன்றே!
என்னதான் செய்தாய் அம்மா
ஏன் எம்மைப் பிரிந்துவிட்டாய்-நின்
அன்பினில் வாழ்ந்த அண்ணன்
அலறியே புலம்புகின்றான்
கட்டிய கணவனுமே
கதியினி இல்லையென்று
கதறியே புலம்புகின்றான்
பொங்கிடும் துயரத்தோடு
புதல்வியர் புலம்புகின்றார்
மருவிய கண்ணீரோடு
மாமி! மாமி!! என்று ஆங்கே
மருமக்கள் புலம்புகின்றார்
பெருகிடும் கண்ணீரோடு
பெருமக்கள் பெரியம்மா! பெரியம்மா!!
என்றுங்கே புலம்புகின்றார்
என்னதான் செய்தாயென்று
எல்லோரும் புலம்புகின்றார்
நீர் எம்மைப் பிரிந்திட்டாலும்
நின் புகழ் யான்றும் ஈங்கு
கல்லினால் செய்த சிற்பம்
கரையாது நிற்குமாப் போல்
கலங்கரை விளக்குத் தன்னில்
காட்டிடும் ஒளியைப்போல்
ஏற்றவர் இதயம் எல்லாம்
இறுகவே பாய்ந்து நிற்கும்.

உற்றார், உறவினர்.



## சிவனடிசேர் மனோன்மணி

மனோன்மணி என்னும்
சீரோன்மணி மண்ணில்
காங்கேயன் துறை நகரில்
பெரிய தம்பி மகள் மணி
என்ன மணி என்றோசை
எங்கிருந்து கேட்குதடி
பாங்கி அங்கே எழுந்து நின்று
பார் மகளாம் துர்க்கையின்
சீர் புகழும் மணியோசை
காங்கேயன் மண்ணில்
அளவை நகர்தன்னில்
அறுபத்தியோராண்டில்
செல்லையா கணபதிப்பிள்ளை
வெற்றி வாகை சூடிய
திருமணத்தின் விளைவாக
மனோரஞ்சிதம் ஜெயரஞ்சிதம்
ஞானரஞ்சிதம் கலாரஞ்சிதம்
எனும் நான்கு மகளும்
செல்வராசா என்றோர்
செல்வ மருகனையும் பெற்று
துர்க்கா துரந்தரியாய்
துர்க்கா துணைபாடி
தூய வாழ்வு நடத்தி
தூர கொழும்புதனில்
இரத்தினம் நிலையத்தில்
பொன்விழாக் காணும்
பெற்றார் சிவனடி

வை. முத்துக்குமாருக் குருக்கள்,
அருள்மிகு துர்க்காதேவி ஆலயம்,
காங்கேசன்துறை.

உ

சிவமயம்

காங்கேசன்துறை

குரக்கன்துறை அருள்மிகு வீரபத்திரகுரு சுவாமி கோயில்

அர்ச்சகர் சிவத்திரு வ. குமாரசாமி அவர்களின்

# உளம் நெகிழ்ந்த இரங்கலுரை

## அடியார் நடுவுள் அமர்ந்த அற்புதமாமணி


காங்கேசன்துறை யாத்திரைச் செல்வவிநாயகர் ஆலய மருங்கினில் ஒரு அற்புத புனிதமலர் தன்னுடைய ஆத்மீக நெறியை மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்ளாது தன்னகத்தே கொண்டு மிளிர்ந்தமாதரசி. சிந்தையை ஒரு நிலையாக்கிச் சிவமாம்பரும் பொருளை உற்றுநோக்கி உள்ளொளி கண்ட உத்தமி. இறைவன் அடியார்களை இன்முகம் காட்டிப் போற்றிப்பணியும் இல்லத்தரசி. இறைவன் பணியென்றால் இவர் உள்ளத்து இன்ப ஊற்றெடுக்கும் இக்குலமகள் இப்பாரினில் தான் வந்த பணியைப் பூர்த்தியாக்கி இன்று நாம் போற்றும் தெய்வமாகி விட்டார்.

செங்கதிரோன் அதிகாலை பவனிவருமுன் துயில் எழுந்து நறுங்கொன்றை மலர் பறித்து அப்பன் செல்வவிநாயகனுக்குப் பூமாலை புனைந்தேத்தி வழிபட்டு அவனழகில் திளைத்திருக்கு காட்சி கண்முன்னே மிளிர்கின்றது. காங்கேசன்துறையில் அன்னை அவள் பாதம் பதியாத ஆலயங்களும் அவள் கைபட்ட பூமாலை சூடாத இறைவிக்கிரகங்களும் இல்லையெனவே கூறலாம். பூமாலை புனைந்தேத்திய இப்புனிதவதியாரின் பூதவுடம்பு மறைந்தாலும் இவள் புகழுடம்பு இப்பாருள்ளளவும் நிலைத்து நிற்கும். மெய்யடியார்கள் கூட்டமெல்லாம் தமது தாயை, தமக்கையை, தங்கையைப் பிரிந்தவர்கள் போல் கண்ணீர் அருவி பெருக்குகின்றனர்.



இல்லறமாம் நல்லறத்தின் இனிய குலவிளக்காய், உற்ற நாயகனுக்கு வாய்த்த முதன்மந்திரியாய் தம் அருஞ்செல்வங்கள் நால்வருக்கும் ஏற்ற கற்பகத்தருவாய், உற்ருருக்கும் மற்ருேருக்கும் உற்ற உறுதுணையாய் வாழ்ந்து அவர் தம் உள்ளங்களில் என்றும் நீங்கா நினைவு கொண்ட அன்புத்தாயானுள்.

அம்பிகையின் திருநாமங்களில் ஒன்ருகிய மனேன்மணி என்ற திருநாமத்தை தனதாக்கித் தெய்வீக வாழ்க்கை வாழ்ந்து இச்சிவசக்தியுடன் இரண்டறக் கலந்து பேரானந்த வாழ்வு பெற்று அன்னையின் ஆத்மாசாந்தியடைய இவர் தம் உயிர் நாயகனுடனும் அருஞ்சேய்களுடனும் சேர்ந்து பிரார்த்திப்போமாக.



## விநாயகர் துதி

கல்லாத மூடனுக்கும் கல்விதரும் கற்றறிந்தோர்
எல்லோரும் மணமகிழ, இசைத் தமிளின் இயல்பு தரும்
நல்லாரை உறவாக்கும், நலந்தரு நன்னெறி உதவும்
பொல்லாத வினை தீர்க்கும் பொல்லாத குஞ்சரமே.

ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறை யிதழித்தாழ் சடையன்
தருமொரு வாரணத்தின் தாழ்கள்
உரு கோட்டன் போடும் வணங்கி ஒவாது
இரவு பகல் உணர்வோர் சிந்தை
திருக்கோட்டயன் திருமால் செல்வமு
மொன்ரூ வெனச் செய்யும் தேவே.

## திருப்புகிழ்

உம்பர் தருத்தேனுமணிக் கசிவாகி
ஒண் கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக்காக வனத் தணைவோனே
தந்தை வலத்தால் அருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமாளே.

## விநாயகர் அகவல்

( ஔவையார் )

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பும் பலவிசைபாடப்
பொன்அரைஞாணும் பூந்துயில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்துஅழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்



வேழமுகமும் விளங்குசெந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்றவாயும் நாலிருபுயமும்
மூன்றுகண்ணும் மும்மதச்சுவடும்

இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்
திரண்டமுப்புரிநூல் திகழ்ஒளிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக்களிறே
முப்பழம்நுகரும் மூஷிகலாவாஹன

இப்பொழுதென்னை ஆட்கொள்ளவேண்டித்
தாயாய்எனக்குத் தான்எழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கம்அறுத்துத்
திருந்தியமுதலைந் தெழுத்துந்தெளிவாய்ப்
பொருந்தவேவந்தென் உளந்தனிற்புகுந்து

குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிதுபொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தால் கொடுவினைகளைந்தே
உவட்டாஉபதேசம் புகட்டிஎன்செவியில்

தெவிட்டாதஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன்தன்னை அடக்கும்உபாயம்
இன்புறுகருணையில் இனிதெனக்கருளி
கருவிகளொடுங்குங் கருத்தினைஅறிவித்து
இருவினைதன்னை அறுத்திருள்கடிந்து

தலமொருந்நான்கு தந்தெனக்கருளி
மலமொருமூன்றின் மயக்கம்அறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி
ஆருதாரத்து அங்குசநிலையும்

பேருநிறுத்திப் பேச்சுரைஅறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற்சுழிமுனைக் கபாலமுங்காட்டி
மூன்றுமண்டலத்தில் முட்டியதூணில்
நான்றுஎழுபாம்பின் நாவிலுணர்த்தி

குண்டவியதனில் கூடியஅசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படஉரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாழுப்புங் கருந்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன்இயக்கமுங்

குமுதசகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங்காட்டி
சண்முகதூலமுஞ் சதுர்முகசூக்ஷமமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்

புரியட்டகாயம் புலப்படவெனக்குத்
தெரிஎட்டுநிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினில்கபால வாயில்காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னைஅறிவித்து எனக்கருள்செய்து

முன்னைவினையின் முதலைக்களைந்து
வாக்குமனமும் இல்லாமனோலயந்
தேக்கியேஎந்தன் சிந்தைதெளிவித்து
இருள்வெளியிரண்டுக்கு ஒன்றிடமென்ன
அருள்தருமானந்தம் அழுத்திஎன்செவியில்

எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல்களைந்தே அருள்வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங்காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்

கணுமுற்றிநின்ற கரும்புள்ளேகாட்டி
வேடமும்நீறும் விளங்கநிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன்கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருள்தன்னை
நெஞ்சக்கருத்தில் நிலையறிவித்துத்

தத்துவநிலையைத் தந்தெனையாண்ட
வித்தகவிநாயக விரைகழல்சரணே.



அமரத்துவம் எய்திய எமது குலவிளக்கு

**திருமதி. கணபதிப்பிள்ளை மனோன்மணி**

மலர்வு: 25 . 05 . 1938

உதிர்வு: 26 . 06 . 1988

உ

# வீரபத்திர குருசுவாமி அம்பாள் துதி

## வீரபத்திரகுருசுவாமி துதி

வீரபத்திர வரப்பிரசாத விசேட சங்கமெங்குமே
பராபத்ர மாகவே பரமாவே குருவாகவே
வாரபத்ர வலசவென வையகத்தினில் மெய்யராய்
வீரதத்வமாகியே வரு வீரலிங்க மகேசனே.

சார பத்திர மிக்கிலாத் தக்கனை
பார பத்திரம் பாணியிற் பற்றியே
கோர பத்திரம் கொண்டு வதைத்திடும்
வீர பத்திரர் மெய்ப்பத மேற்றுவாம்.

## முத்துமாரி அம்பாள் துதி

திருமகள் நாதன்தங்கை சிறப்புடை மாரிதேவி
அரும்பெற்ற சிவத்தின் சக்தியாகிய உமையின்கூறே
விரும்பிய பக்தர்போற்றி வேண்டியே துதித்துப்பாடி
பெரும்பெரு வரங்கள்பெற்ற பெட்புடைத் தெய்வமன்றே.

சுந்தர மேவிய செந்திரு நாயகி
துர்க்கனை வென்றதோர் கற்பக மாரி
அந்தர மேவி யருந்தவ சாகி
அம்புவி வாழ்விக்க வந்தாள் வந்தாள்.

## முனீஸ்வரன் துதி

முன்னவனே கோட்டை முனியப்பா யாழ்நகரில்
மன்னும் பரனே மகாதேவா — பொன்னும்
பதமும் கலையாவும் பாலிப்பாய் என்றன்
இதயம் தனிலே இருந்து.

## வைரவர் துதி

விரித்தப வடிபடு டமருங்கை
உரித்துமை யஞ்சக்கண்டும் ஒண்டிரு மணிவாய்விள்ளத்
தரித்ததோர் கோலகால பைரவனாகி வேழம்
திரித்தருள் செய்தார் சேறைச்செந்நெறிச் செல்வனரே.



# நித்திய தோத்திரப் பாராயணம்

*( பஞ்சபுராணம் )*

ஞாயிற்றுக்கிழமை

## தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. 1

## திருவாசகம்

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றி யொன்றில்லை
யாருன்னை யறியகிற் பாரே. 2

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 3



## திருப்பல்லாண்டு

மிண்டுமனத்தவர் போமின்கண் மெய்யடி
யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோரா
னந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே. 4

## திருப்புராணம்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம். 5

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறைமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே 6

திங்கட்கிழமை

## தேவாரம்

*திருஞானசம்பந்தசுவாமிகள்*

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியினும் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 1

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 2

## திருவிசைப்பா

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி இறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள்
காலகாலா காம நாச
ஆலமே அமுதுண் டம்பலஞ் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே. 3

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
வன்னநடை மடவாளுமை கோனடியோமுக்
கருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்கு நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. 4

## திருப்புராணம்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. 5



## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்ததெனன் றென்றுற் றுனை நாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே. 6

செவ்வாய்க்கிழமை

## தேவாரம்

### திருநாவுக்கரசுநாயனார்

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியே
னேற்றாயடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதுந்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
வாற்றே னடியேனதிகைக் கெடில
வீரட்டானத் துறை யம்மானே. 1

## திருவாசகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்துன் விரை
யார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக்
கண்டுகொள்ளே. 2

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே. 3

## திருப்பல்லாண்டு

சேவிக்கவந்தய னிந்திரன் செங்கண் மாலெங்குந்
திசை திசையன
கூவிக்கவர்ந்து நெருங்கிக் குழாங் குழாமாய்
நின்று கூத்தாடு
மாவிக் கமுதையென்னார் வத்தனத்தினை
யப்பனை யொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 4

## திருப்புராணம்

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம்போற்றி
வல்லைவந்தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையி்ன்ப வெள்ள மெனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்துளாடுஞ் சேவடி போற்றியென்ன, 5

## திருப்புகழ்

காரணமதாக வந்து புவிமீதே
காலனு காதி சைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான நந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர்கிளை மாளவென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே. 6



புதன்கிழமை

## தேவாரம் [illegible]

சுந்தரமூர்த்திநாயனார்

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை யாள்வான்திருக் கேதீஸ்வரத்தானே. 1

## திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாடுவ்
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே. 2

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு
ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குத்
தூயநற் சோதியுட்சோதீ
யடல் விடைப் பாகா வம்பலக்கூத்தா
வயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே. 3

## திருப்பல்லாண்டு

ஆரார்வந்தாரமரர் குழாத்திலணி யுடையா திரைநா
ராயணனொடு நான்முகனங்கி யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர்குழாங் கடிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும் பல்லாண்டு கூறுதுமே. 4

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி. 5

## திருப்புகழ்

எதிரிலாத பத்திதனைமேவி இனியதாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி எனதுளே சிறக்க அருள்வாயே
கதிர்காம வெற்பி லுறைவோனே கனகமேரு வொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே வழுதி கூனிமிர்த்த பெருமாளே. 6

வியாழக்கிழமை

## தேவாரம்

*திருஞானசம்பந்த சுவாமிகள்*

நிரைகழலரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே. 1

## திருவாசகம்

ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறலறிலை செய்வதொன் றறியேனே. 2

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே. 3



## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்டோல மிட்டின்னம் புகரிலாதா
யிரந்திரந் தழைப்ப வென்னுயிராண்ட கோவினுக்கென்
செயவல்ல மென்றுங்
கரந்துங் கரவாத கற்பகனாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்து நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே. 4

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம்பலம் பலத்து ணின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி. 5

## திருப்புகழ்

இருந்தவீடுங் கொஞ்சிய சிறுவரு முறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே. 6

வெள்ளிக்கிழமை

## தேவாரம்

*திருஞானசம்பந்த சுவாமிகள்*

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 1

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 2

## திருவிசைப்பா

ஏகநாயகனை யிமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகை யாவூர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றி மற்றொன்று
முண்டென வுணர்கிலேன் யானே. 3

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னு
ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 4

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 5



## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரிபோர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உகந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமர்ந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே. 6

சனிக்கிழமை

## தேவாரம்

*சுந்தரமூர்த்திநாயனார்*

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே. 1

## திருவாசகம்

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறு அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே. 2

## திருவிசைப்பா

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்து
மேழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்று
லஞ்சலென் றருள் செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்த செஞ்சாலிக்
கடைசியர்களை தருநீலஞ்
செய்வரம் பரம்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே.

## திருப்பல்லாண்டு


சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீ
ழாரும் பெறாத வறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருலகி
லூருமுலகுங் கழறவுழறி யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. 4

## திருப்புராணம்

ஊனா டைந்த உடம்பின் பிறவியே
தானா டைந்த உறுதியைச் சாருமால்
தேனா டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மானா டஞ்செய் வரதர்பொற் றாள்தொழ. 5

## திருப்புகழ்

கலையுமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின்
மனமேவு வாலக் குமரேசா
சிலை வேட சேவற் கொடியோனே
திருவாணிகூடற் பெருமாளே, 6





உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## விநாயகர்துதி

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

''வேதநாயகனே போற்றி, விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகாபோற்றி மறுசமயங்கள் மாழ
பேதகஞ் செய்வாய்போற்றி பிஞ்ஞகாபோற்றி-யான்செய்
பாதகம் அனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.'

## திருவாசக நூற் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரென்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வா அழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்

அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்ந் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரம் ஆய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழு அழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்து(உ)ள் உருகும்



நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரானே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையும் ஆம் அல்லையும் ஆம்
சோதியனே துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நல்லிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

உ

முருகன் துணை



தேவராய சுவாமிகள் அருளிச்செய்த

# கந்தர் ஷஷ்டி கவசம்

## காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
ஷஷ்டி கவசந்தனை.

குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

ஷஷ்டியை நோற்கச் சரவண பவனர்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனர்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனர் வருக
வருக வருக மயிலோன் வருக



இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனர் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவசர ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ வீரா நமோ நமோ
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவ்வும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியும் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்குடிங் குகுகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேண் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டுங் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்துடை யிரண்டும் பகர்வேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க



ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வயிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்கத்
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்கக்
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்கத்
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்கப்
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபடப்
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் பிறக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணையும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனைமயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினின் முட்டப் பாசக் கயிற்றாற்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிடச்
செக்கு செக்கு செதிற்செதி லாகச்
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் போத்தொடு நாயும்
எலியும் கரடியும் எனைத்தொடா தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுகடு விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகளொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனே



இடும்பனை யளித்த இனியவேள் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேன் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமாரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரட்சி அன்னமுஞ் சொன்னமு
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள்நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையேன் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் ஷஷ்டி கவசம் விரும்பிப்
பாலன் றேவ ராயன் பகர்ந்ததைக்
காலையின் மாலையிற் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் ஷஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மார் செயலது அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நவ் லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேவா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

முற்றிற்று.



# உவந்தேற்றும்
# உத்தமிக்காய்
# ஊரவர்தம் அஞ்சலிகள்

சீரார் மணிவிளக்கே சீதளத்துப் பூங்காற்றே
பேராளர் மதித்தோங்கு புகழ்பெற்ற திருப்பேறே
தாராள மாயுதவு தனவதியே சிந்தை நிறை
ஓராறு கண்ணீர் தமையளித் தெங்குற்றாய்?

ஒப்புடன் முகமலர்ந்து பசித் துதவி செய்யும்
ஒப்பிலாக் குணவதியே கோமளமே மனோன்மணி நீ
தப்பேது செய்தமென்று சஞ்சலத்தை நமக்கீந்து
ஒப்பிலான் பாதப் சரணடைந்தாய் தாயே!

கன்னங் கருகிவரக் கணைநீர் சுரந்துனது
வண்ணத் திருமுகத்தில் வந்து விதிதனை முடித்த நோயினால்.
எண்ணக் கொடுகொடுக்கும் கொடிய [redacted]
வண்ணம் குலைந்தாயோ வாடா மனோன்மணியே!

ஆராத இன்பம் அருளும்மலை யகத்தான்
தேராத இன்பம் தெவிட்டா தளித்தற்காய்
தேர்ந் தெடுத்தானென்றெண்ணி கவலைவிட்டு
வாரீர் நாம் சாந்தியுற வேண்டுதுமிறையை

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

ஊர்மக்கள்.



உ

காங்கேசன்துறை

அமரத்துவ மெய்திய

# திருமதி மனோன்மணி கணபதிப்பிள்ளை

அவர்களின்

## வம்சாவழி

செல்லையா + [redacted]பிள்ளை

- கணபதிப்பிள்ளை
- தர்மலிங்கம்
- அன்னலட்சுமி

பெரியதம்பி + அன்னப்பிள்ளை

- வீரசிங்கம்
- மனோன்மணி

கணபதிப்பிள்ளை + மனோன்மணி

- மனோரஞ்சிதம் ✧ செல்வராஜா
- ஜெயரஞ்சிதம்
- ஞானரஞ்சிதம்
- கலாரஞ்சிதம்

# நன்றி நவிலல்

கடந்த 26 - 06 - 88-ல் சிவபதமெய்திய எனது அன்பு மனைவியும், அருமைத் தாயாரும், அருமை மாமியாரும், அருமைப் பெரியம்மாவும் ஆகிய திருமதி கணபதிப்பிள்ளை மனோன்மணி அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும், அவரது அந்திமக் கிரியைகளில் பங்கு கொண்டு எமக்கு மனமொழி, மெய்களால் உதவி ஆறுதல ளித்தோர்க்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த் திக்கும் உங்கள் அனைவரிற்கும் நன்றி நவில்கிறோம்.

இடந்தரை,
ஒழுங்கை,
காங்கேசன்துறை.

கணவன்,
மக்கள், மருமகன்